செய்தி வெளியீடு **நாள்: 19.01.2026**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் வருகின்ற 29.01.2026 அன்று திரு.வி.க. நகர் தொகுதி, சந்திரயோகி சமாதி சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் பிரம்மாண்டமான "அண்ணல் டாக்டர் அம்பேத்கார் திருமண மண்டபம்" திறந்து வைக்க உள்ளார். மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (19.01.2026) திரு.வி.க. நகர் தொகுதி, மண்டலம்–6, வார்டு–74, பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் **புதிய சமுதாய நலக்கூடம்,** பெரம்பூர் இரயில் நிலையம் அருகில் மேம்படுத்தப்பட்டு வரும் **முரசொலி மாறன் பூங்கா, கன்னிகாபுரம் விளையாட்டு மைதானம்** மற்றும் புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் கட்டப்பட்டு வரும் **நவீன சலவைக் கூடத்தின்** இறுதி கட்டப் பணிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** வருகின்ற 21.01.2026 அன்று திறக்கப்படவுள்ள சென்னை, ஏழுகிணறு, ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் **776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளின் திறப்பு விழா** முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, ஒப்பந்ததாரர் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகின்ற நோக்கில், அவர்களுடைய வீட்டுத் திருமணம் போன்ற சுப காரியங்களுக்குத் தனியார் திருமண மண்டபங்களை அணுகுகின்ற பொழுது, பொருளாதார ரீதியாகப் பின்தங்கி இருக்கின்ற மக்களுக்கு அதிக அளவில் கடன் சுமை ஏற்படுகிறது. வாழ்நாள் முழுவதும் அத்தகைய கடனை ஈடு செய்ய முடியாத நிலை இருப்பதை உணர்ந்து, வறுமைக் கோட்டிற்குத் தங்கியிருக்கின்ற மக்கள் வசிக்கின்ற பகுதிகளில், தனியார் திருமண மண்டபங்களுக்கு இணையாக ஏன் அரசின் சார்பிலும் இது போன்ற கட்டடங்கள் எழுப்பப்படக்கூடாது என்ற கேள்வியை முன்வைத்தோம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமமும் (CMDA), சென்னை பெருநகர மாநகராட்சியும் பல்வேறு இடங்களில் இது போன்ற திருமண மண்டபங்களைக் கட்டி வருகின்றோம். அந்த வகையில், அண்மையில் **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** பொற்கரங்களால், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் கட்டப்பட்ட சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பிலான, முழுதும் குளிரூட்டப்பட்ட திருமண மண்டபம் கடந்த ஆண்டு 18–ஆம் தேதி மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. அந்தத் திருமண மண்டபத்திற்கு, அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பெயரால் **"பேரறிஞர் அண்ணா மாளிகை"** என்று **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** பெயர் சூட்டித் திறந்து வைத்தார். அது இன்றைக்குத் தனியார் திருமண மண்டபங்களுக்கு இணையாகக் காட்சியளிக்கின்றது.

அதே வகையில், நம்முடைய திரு.வி.க. நகர் பகுதியில், குறிப்பாகத் தினக்கூலிகள் மற்றும் அரசு அலுவலர்கள் நிறைந்துள்ள பகுதிகளில், பெரிய அளவிலான தொழிலதிபர்கள் இல்லாத

சூழலில், இப்பகுதி மக்கள் சுப காரியங்களுக்காகத் தென் சென்னை போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, இங்கேயே ஒரு திருமண மண்டபம் வேண்டும் என்ற கோரிக்கையை மேயர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் வைத்தனர். அதனடிப்படையில், **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின்** கவனத்திற்கு இதைக் கொண்டு சென்று, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சுமார் 30,000 சதுர அடி பரப்பில் ஒரு திருமண மண்டபம் அமைப்பதென முடிவு செய்யப்பட்டது.

இதில் ஒரே நேரத்தில் 650 பேர் அமரக்கூடிய வசதி, 60x74 (அகலம் x நீளம்) கொண்ட மணமேடை, 175 பேர் அமர்ந்து உணவருந்தக்கூடிய உணவுக் கூடம் மற்றும் 100 வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் உள்ளன. மணமேடைப் பகுதி முழுமையாகக் குளிரூட்டப்பட்டும், உணவுக் கூடம் மின்விசிறி வசதிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. மணமகன், மணமகளுக்கு எனத் தனித்தனியாக 6 அறைகள் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாமன்ற உறுப்பினர், மேயர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோருடைய கோரிக்கையை ஏற்று, இந்தத் திருமண மண்டபத்திற்கு "**அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை**" என்று **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** பெயர் சூட்டியிருக்கின்றார்கள். இந்தப் பணியில் துறையின் திருமதி.செயலாளர் காக்கர்லா உஷா அவர்களும், உறுப்பினர் செயலாளர் திரு.பிரகாஷ் அவர்களும், சி.இ.ஓ திரு.சிவஞானம் அவர்களும், வட்டார அலுவலர் திரு.கௌசிக் அவர்களும், மண்டலக் குழு அலுவலர் திரு.சொக்கலிங்கம், சரவணன் மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள் என அனைவரும் தொடர்ந்து கண்காணித்து வருகின்றோம். தனியார் கட்டுமானத்தை மிஞ்சும் தரத்தில் அமைந்துள்ள இந்த மண்டபம், வரும் 29-ஆம் தேதி மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது.

கட்டணம் குறித்த செய்தியாளர்களின் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின் பதில்:

கட்டணத்தைப் பொறுத்தவரை 75 ஆயிரம் ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தவிர்த்து மின்சாரம் மற்றும் தூய்மைப் பணிகளுக்குத் தனியாக வசூலிக்கப்படும். அலங்காரங்களை அவரவர் விருப்பத்திற்கேற்பச் செய்து கொள்ளலாம். மொத்தமாகக் கட்டணம் 75 ஆயிரம் மட்டுமே. ஏற்கனவே சொன்னது போல், இது மிட்டா மிராசுகள் வாழும் பகுதி அல்ல; தினக்கூலிகள் மற்றும் சிறு தொழில் செய்பவர்கள் வாழும் பகுதி. அவர்கள் தென் சென்னையைத் தேடி அலையக் கூடாது என்பதற்காகவே இது உருவாக்கப்பட்டுள்ளது. நம்முடைய அன்புத் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் 29-ஆம் தேதி நேரடியாக வந்து இதனைத் திறந்து வைக்க உள்ளார்.

இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி.சிங், இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாநகராட்சி நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சென்னைக் குடிநீர் வாரிய தலைமைப் பொறியாளர் திரு.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மின்சார வாரிய தலைமைப் பொறியாளர் திரு.தமிழ்ச்செல்வன், கண்காணிப்புப் பொறியாளர் திரு.இளம்பரிதி, சிஎம்டிஏ கண்காணிப்புப் பொறியாளர் திரு.ராஜன்பாபு மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.